**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**In the Court of Judicial Magistrate at Arakkonam.**

**C.C. 231/12**

**PW: 2 D.W: C.W:**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | | குப்பன் | Caste | : | |
| Father Name | : | இராஜேந்திரன் | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

**Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of The day of .05.06.2018**

*****

<u>அரசுத்தரப்பு முதல் விசாரணை:</u>

நான் காட்டுப்பாக்கத்தில் குடியிருக்கிறேன். அம்பத்தூரில் உள்ள தனியார் கம்பெனியில் வேலை செய்கிறேன். தினமும் நான் வழக்கமாக காட்டுப்பாக்கத்தில் இருந்து அனவர்த்திகான் பேட்டைக்கு ரயில் நிலையத்திற்கு செல்வதற்காக போவேன். 31.10.2007 ம் தேதி 7.10 இரயிலை பிடிப்பதற்காக சுமார் 6.40 மணியளவில் காட்டுப்பாக்கத்தில் இருந்து அனவர்திகான்பேட்டை செல்ல ஆட்டோவில் செல்வது வழக்கம் ஆனால் அன்று மேக்சிகேப் வேன் வந்ததால் அதில் 20, 25 பேர் ஏறினார்கள் அது காட்டுப்பாக்கம் மணி என்பவருக்கு சொந்தமான வாகனம் அதை ஏழுமலை ஓட்டினார். ஆஜர் எதிரிதான் ஏழுமலை. அந்த வண்டி கண்ரோல் இல்லாமல் இரண்டு சுற்று சுற்றி மரத்தில் மோதியது. அதில் இருந்த அனைவருக்கும் உள்காயம் ஏற்பட்டது. நாங்கள் அரசு மருத்துவமனைக்கு சென்றோம். வன்னாமேடு என்ற இடத்தில் வண்டி கவிழ்ந்தது. நாங்கள் அரக்கோணம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சேர்க்கப்பட்டோம். எனக்கு வலது தோள்பட்டையில் உள்காயம் ஏற்பட்டது. நான் மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றறேன். நான் அளித்த புகார் வாக்குமூலம் அ.த.சா.ஆ.1 ஆகும். என்னுடன் பயணம் செய்தவர்களில் 5 பேருக்க அரசு மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டது சிலபேர் தனியார் மருத்துவமனைக்கு சென்றார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பு கு.வி

போலிசார் என்னை எங்கு விசாரணை செய்தார்கள் என்றால் ஜி.எச்.மருத்துவமனையில். வேறு எங்காவது என்னை விசாரித்தார்கா என்றால் இல்லை. அந்த மேக்சிகேப்பின் வண்டி நெம்பர் வண்டி கலர் எனக்கு தெரியாது என்றால் சரிதான். சம்பவத்திற்கு முன்பே எழுமலையை தெரியுமா என்றால் தெரியும் அவர் அதே ஊர். நான் என்ன படித்துள்ளேன் என்றால் பிளஸ் டு. பொதுவாக மேக்சிகேப்பில் எவ்வளவு பேர் ஏறலாம் என்றால் 22 பேர். எவ்வளவு பேர் சம்பவத்தன்று பயணித்தோம் என்றால் 25 பேர். வண்டியில் போவதற்கு டிக்கட் கலைக்சன் செய்தார்களா என்றால் பஸ்பேர் 5 ரூபாய் என்றால் அதேபோல் வசூல் செய்யதார்கள். அன்றைய தினம் பயணம் செய்ததற்கு பணம் கொடுத்தோமா என்றால் ஆக்சிடெண்ட் ஆனதால் பணம் கொடுக்கவில்லை. தினமும் மேக்சிகேப்பில் தான் வேலைக்கு செல்வேனா என்றால் இல்லை ஆட்டோ இல்லை என்றால் செல்வோம். பொதுவாக தனியார் வாகனங்கள் பயணிகளைள ஏற்றி செல்ல பர்மிட் வாங்க வேண்டும் என்றால் சரிதான். எங்களுடைய அசவர தேவைக்காக தான் அந்த வண்டியை எடுத்து சென்றோம் என்றால் வேலைக்கு செல்ல வேண்டும் என்பதற்காக போனோம். அந்த பேருந்து நிறுத்தத்தில் எவ்வளவு பேர் இருந்தார்களோ அவ்வவு பேரும் வரையறை இல்லாமல் அந்த வண்டியில் ஏறினார்கள் என்றால் ஆம் 25. அதனால் அந்த வாகனத்தின் அளவிற்கு மீறி பயணமி செய்தார்கள் என்றால் சரிதான். காட்டுப்பாக்கத்திலிருந்து அன்வர்த்திகான்பேட்டை சாலை குண்டும் குழியுமாக உள்ள சாலை என்றால் சரிதான். ஏற்கெனவே சாட்சியம் அளித்த குப்பன் ஓட்டுநர் நன்றாக தான் வண்டி ஓட்டி வந்தார் என்று கூறியுள்ளார் என்றால் வண்டி கன்ரோல் இல்லாமல் கவிழ்ந்தது. வண்டியில் முறையற்று பயணம் செய்தோம் என்றால் சரிதான். எங்களுடைய அஜாக்ரதையால் தான் வாகனம் விபத்திற்குள்ளானது என்றால் சரியல்ல.